JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }
Miscellaneous } Case No : - CC// 563/2024
: Prosecution P.W - 54

NAME : குமார்
FATHER'S NAME :
VILLAGE :
TALUK :
CASTE :
CALLING :
RELIGION :
AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 18.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பஞ்சாயத்தில் துப்புரவு பணியாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்களிடம் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும் அசா.2 அந்தோணிராஜ். அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியும் . அசா.4 செல்வராஜ் அசா.5 ஜோசப்ராஜ் தெரியாது அசா.6 அருமைகிளி தெரியும். அசா.7 பாலமுருகன் . அசா,8 செல்வராணி தெரியாது அசா.9 பூங்கொடி சூசை தெரியும். அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி ஆகியோரை தெரியாது. அசா.12 பொன்பாண்டி தெரியாது அசா.13 சாந்தி தெரியாது அசா.14 குணசீலன் தெரியாது, அசா.15 முத்துலெட்சுமி தெரியாது, அசா.16 செல்வகுமாரி ஆகியோர்களை தெரியாது அசா.17 முருகன் தெரியாது அசா.18 ராமர் மனைவி சரோஜா தெரியும் அசா.19 குமரேசன் அசா.20 மணிராஜ் தெரியாது அசா.21 பொன் சேகர் தெரியாது . அசா.22 சுதா தெரியாது, அசா.23 ரவிகுமார் தெரியாது அசா.24 ஜெயஜோதி தெரியாது, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியாது, அசா.27 தெய்வகனி தெரியாது, அசா.28 செல்வன் தெரியும், அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியாது அசா.30 அருள்ஜெலஸ்டீன் தெரியாது, அசா.31 அன்னபூரணி தெரியாது அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் அசா.33 முத்துக்கனியை தெரியாது , அசா.34 வசுமதி தெரியாது, அசா.35 இருளப்பன் தெரியாது, அசா.36 முருகன் தெரியாது, அசா.37 கெலின் ஞானபிரகாசம் தெரியாது, அசா.38 மரியசுந்தரி

ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி அசா.40 புஷ்பவள்ளி அசா.41 விஜய், அசா.42 சரோஜா ஆகியோரை தெரியாது. அசா.43 பாலமுருகன் அசா.44 காளீஸ்வரி ஆகியோர்களை தெரியாது. அசா.45 கனகமணி, அசா.46 சகுந்தலா தெரியாது, அசா.47 ஞானப்பிரகாசம் தெரியாது. அ.சா.48 சேர்மக்கனியை தெரியாது, அ.சா.49 மூக்கம்மாள் தெரியும் அசா.50 முருகன் தெரியாது. அசா.51 ஐயப்பன் தெரியும் அசா.52 கவிதா தெரியும். அசா.53 யோகேஸ்வரி தெரியும். எதிரிகள் 2010ம் வருடத்திலிருந்து சீட்டு பிரித்தார்கள். 7குழுக்களாக சீட்டு பிரித்தார்கள். நான் ரூ.30000 சீட்டில் 2 சீட்டுகளும், ரூ,50000 சீட்டில் 2சீட்டுகளும் போட்டிருந்தேன். மொத்தம் ரூ.58000 சில்லரை கட்டி உள்ளேன். ஒரு சீட்டில் 52 வாரங்களும், மற்றொரு சீட்டில் 42 வாரங்களும் கட்டி இருந்தேன். சீட்டு பணத்தை மாயவன்கோவிலில் ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலை 7 மணியளவில் கொண்டு கொடுப்பேன். நான் சீட்டு பணத்தை கொடுக்கும்போதெல்லாம் நோட்டில் வரவு வைத்து கொள்வார்கள். சீட்டு நடத்தாமல் போட்டு விட்டுபோய்விட்டார்கள். 9மாதம் கழித்து தான் திரும்ப வந்தார்கள். கிருஷ்ணன் என்பவரும் சீட்டு போட்டவர்களும், நானும் மாயவன் கோவிலுக்கு சென்று எதிரிகளிடம் கேட்க போயிருந்தோம். அப்போது எதிரிகள் இருவரும் கிருஷ்ணனை பார்த்து தகாத வார்த்தைகளால் பேசினார்கள். சீட்டு பணத்தை தரமுடியாது நோட்டு எதுவும் இல்லை, பார்க்க வேண்டிய இடத்தில் பார்த்து கொள்ளுங்கள் என்று எதிரிகள் கூறினர்.

கட்டிய சீட்டு பணம் இதுவரை ஒன்றும் தெரியவில்லை. எதிரி வாத்தியார் என்பதாலும் அவர் மீது நம்பிக்கையின் பேரிலும் நான் சீட்டு போட்டேன். எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கிருஷ்ணன் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ரூ.50000 சீட்டில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்றால் 100 உறுப்பினர்கள். ரூ.30000 சீட்டில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்றால் 100 உறுப்பினர்கள். ரூ.30000 சீட்டிற்கு வாரம் ரூ.300 கொடுப்பேன், ரூ,50000 சீட்டிற்கு ரூ.500 கொடுப்பேன். ஒவ்வொரு வாரமும்ரூ.50000 சீட்டிற்கு மற்றும் ரூ.,30000 சீட்டிற்கு எவ்வுளவு செலுத்துவேன் என எழுதி வைத்திருந்தேனா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கும் போது ஒவ்வொரு வாரமும் எவ்வுளவு பணம் ரூ.50000சீட்டிற்கு மற்றும் ரூ.30000 சீட்டிற்கு கட்டினேன் சொன்னேனா என்றால் சொன்னேன். எங்குவைத்து கேட்டார்கள் என்றால் கோவிலில் வைத்து கேட்டார்கள். என்றுகேட்டார்கள் என்றால் கோவிலில் பிரச்சினை நடக்கும் போது வந்தார்கள். அதன் பின் காவல்நிலையம் கூப்பிட்டார்கள். காவல்நிலையம் சென்றேன். காவல்நிலையத்தில் புகார் யாரெல்லாம் கொடுத்தார்கள் என்றால் கிருஷ்ணன் என்பவர் புகார் கொடுத்திருக்கிறார். அந்த புகாரை நான் படித்து பார்த்தேனா என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது ஆனால் என்னிடம் படித்து சொன்னார்கள்.

என்னிடம் படித்து சொன்ன பேப்பரில் பாபநாசம் மகன் குமார் என்பவர் ரூ.50000 மற்றும் ரூ.30000 சீட்டுகள் போட்டதாக எழுதபட்டிருந்ததா

என்றால் ஆமாம். ரூ,50000 சீட்டில் 42 வாரங்களும், ரூ.30000 சீட்டில் 52 வாரங்கள் செலுத்த பட்டிருந்ததாக அதில் சொல்லபட்டிருந்தது என்றால் சரிதான். எவ்வுளவு தொகை செலுத்தினேன் என அதில் சொல்லபட்டிருந்தது என்றால் சரிதான். கோவிலில் பிரச்சினை நடந்த பிறகு எத்தனை நாட்கள் கழித்து புகார் கொடுக்கபட்டதா என்றால் ஞாபகம் இல்லை. பிரச்சினை நடந்த பிறகு மறுநாள் புகார் கொடுக்கபட்டது. பூங்கொடி சூசையின் கணவர் பெயர் தெரியாது, பூங்கொடி சூசை என்ற அம்மா இறந்து விட்டார். எதிரி எந்த பள்ளிக்கூடத்தில் வேலை பார்க்கிறார் என்றால் திருமலைபுரம் பள்ளியில் வேலை பார்க்கிறார். மாயவன் கோவில் வெய்க்காலிபட்டியில் உள்ளது. எனக்கும் வெய்க்காலிபட்டி தான். உள்ளூர் என்பதால் அந்த கோவிலை யார் நிர்வாகம் செய்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மகேஷ் மாயவன் என்பவரை தெரியும். அவர் கோவில் வரிதாரர் என்றால் சரிதான். தற்போது அந்த கோவிலில் திருவிழாக்கள் நடந்ததா என்றால் நடந்தது. யார் நடத்தினார் என்றால் தெரியாது. மாயவன் கோவிலை சேர்ந்த குடும்பத்தினர் நடத்தினர். கரைப்பான் சீட்டு பணம் யாருக்கு என்றால் வாத்தியாருக்கு. நான் வாரா வாரம் ரூ.50000 சீட்டில் கழிவு போக செலுத்துவேனா என்றால் முன்னதாக செலுத்தி விடுவேன்.ரூ.50000 சீட்டிற்கு வாரம் 500 ரூபாயும், ரூ.,30000 சீட்டிற்கு வாரம்ரூ.300 ம் செலுத்தினேன் என்றாலும் இதற்கு கூடுதல் குறைவு தொகை கிடையாது என்றாலும் சரிதான் நான் ஏலத்தில் இதுவரை கலந்து கொண்டேனா என்றால் கலந்து கொள்ளவில்லை.

ரூ.50000 சீட்டில் 42 வாரம் கட்டியதில் யார் யார் இதுவரை பணம் எடுத்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. 100 உறுப்பினர்கள் பெயர் தெரியாது. ரூ.30000 சீட்டில் என்னை தவிர மற்றவர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. சீட்டு பிரிக்காததினால் காவல்நிலையத்தில் எந்த புகாரும் இந்த புகாருக்கு முன்பாக கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்லும் காலகட்டத்தில் திருமைலைபுரம் பள்ளியில் வாத்தியார் தொடர்ந்து ஆசிரியராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். 9 மாத காலம் சீட்டு பணம் பிரிக்காததத்தினால் ஏன் சீட்டு பிரிக்கவில்லை என்று வாதத்தியாரிடம் அவர் வேலை பார்க்கும் பள்ளியில் சென்று நான் கேட்கவில்லை என்றால சரிதான். நான் இந்த சீட்டு மட்டும் தான் போட்டுள்ளேன். ரூ.50000 சீட்டு எந்த மாதம் ஆண்டு துவங்கபட்டது என்றால் ஞாபகம் இல்லை. ரூ.30000 சீட்டு எந்த மாதம் போட்டேன் என்றால தெரியாது. நான் சொல்வது போல் சொன்ன தேதியில் எதிரியிடம் எந்த வித சீட்டு பணமும் கொடுத்திருப்பது கிடையாது என்றால் சரியல்ல. எதிரி சீட்டு பணம் நடத்தியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் யாரெல்லாம் கையெழுத்து போட்டார்கள் என்று தெரியாது. புகார் காலை, மாலை, இரவு எந்த நேரம் கொடுக்கபட்டது என்று தெரியாது. மாயவன் கோவிலை நிர்வாகம் செய்தது சம்பந்தமாக எதிரிக்கும், மகேஷ் மாயவனுக்கும் பிரச்சினை இருந்தது என்றால் தெரியாது. இந்த கோவிலை நிர்வாகம் செய்தது சம்பந்தமாக எதிரிக்கும், மகேஷ் மாயவன் குடும்பத்துக்கும் பிரச்சினை இருந்தது எனக்கு தெரியும் என்றாலும் ஆனால்

வேண்டுமென்றே தெரியாது என சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

இந்த கோவிலில்பிரச்சினை நடந்தது காலையா, மாலையா, சாயங்காலமா என்றால் சாயங்காலம். பிரச்சினை நடந்தது தெரிந்து தான் போலிஸார் வந்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி எவ்வித சீட்டு பணமும் மாயவன் கோவிலில் வைத்து நடத்தி இருப்பது கிடையாது என்றால் சரியல்ல. மகேஷ் மாயவன் தூண்டுதலின் பேரில் எதிரி மீது அவருக்குள்ள முன்பகை காரணமாக கிருஷ்ணன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால்சரியல்ல.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் செலுத்தியதாக சொல்லப்படும் ரூ.50000 மற்றும் ரூ.30000 சீட்டு பணத்தில் பணம் எடுத்தவர்கள் செலுத்தினார்களா என்றால் செலுத்திவிட்டார்கள். யாரெல்லாம் பணம் எடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. உண்மையிலேயே இந்த எதிரிகள் எவ்வித சீட்டு பணமும் நடத்தாததால் தான் நான் சேர்ந்த சீட்டு பணத்தில் யார் யார்கள் சேர்ந்தார்கள் என்ற நபர்களை கூட என்னால் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் மாயவன் கோவிலில் வைத்து எவ்வித சம்பவமும் நடந்திருப்பது கிடையாது என்றாலும் அங்கு போலிசார் வந்திருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC// 563/2024

: Prosecution P.W - 53

NAME : யோகேஸ்வரி

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 18.11.2025

முதல் விசாரணை

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சீட்டு பிரிப்பார்கள். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியாது. அசா.2 அந்தோணிராஜ் தெரியாது. அசா.3 டேவிட் அமல்ராஜ் தெரியாது . அசா.4 செல்வராஜ் அசா.5 ஜோசப்ராஜ் அசா.6 அருமைகிளி . அசா.7 பாலமுருகன் . அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி ஆகியோரை தெரியாது. அசா.12 பொன்பாண்டி தெரியாது அசா.13 சாந்தி தெரியாது அசா.14 குணசீலன் தெரியாது, அசா.15 முத்துலெட்சுமி தெரியாது, அசா.16 செல்வகுமாரி ஆகியோர்களை தெரியாது அசா.17 முருகன் அசா.18 ராமர் மனைவி சரோஜா ஆகியோர்களை தெரியாது அசா.19 குமரேசன் அசா.20 மணிராஜ் தெரியாது அசா.21 பொன் சேகர் தெரியாது . அசா.22 சுதா தெரியாது, அசா.23 ரவிகுமார் தெரியாது அசா.24 ஜெயஜோதி தெரியாது, அசா.25 ஜானகி ஆகியோரை தெரியாது. அசா.26 பவளக்கொடி தெரியாது, அசா.27 தெய்வகனி தெரியும், அசா.28 செல்வன் தெரியாது, அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியாது அசா.30 அருள்ஜெலஸ்டீன் தெரியாது, அசா.31 அன்னபூரணி தெரியும் அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ் அசா.33 முத்துக்கனியை தெரியாது , அசா.34 வசுமதி தெரியாது, அசா.35 இருளப்பன் தெரியாது, அசா.36 முருகன் தெரியாது, அசா.37 கெலின் ஞானபிரகாசம் தெரியாது, அசா.38 மரியசுந்தரி ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி அசா.40 புஷ்பவள்ளி அசா.41 விஜய், அசா.42 சரோஜா ஆகியோரை தெரியாது. அசா.43 பாலமுருகன் அசா.44 காளீஸ்வரி ஆகியோர்களை தெரியாது. அசா.45 கனகமணி, அசா.46 சகுந்தலா தெரியாது, அசா.47 ஞானப்பிரகாசம் தெரியாது ,. அ.சா.48 சேர்மக்கனியை தெரியாது, அ.சா.49 மூக்கம்மாள்

அசா.50 முருகன் தெரியாது. அசா.51 ஐயப்பன் தெரியாது, அசா.52 கவிதா தெரியும். கடந்த 10 வருடங்களாக ஆஜர் எதிரிகளிடம் நான் சீட்டு போட்டிருந்தேன். நிறைய குழுக்களாக எதிரிகள் சீட்டு பிரித்தனர். ரூ.61000 சீட்டில் 4 சீட்டுகள் போட்டிருந்தேன். மொத்தம் 20 வாரங்கள் சீட்டு பணம் கட்டிருந்தேன். நான் சீட்டு பணத்தை ஞாயிற்றுக்கிழமை தோறும் மாலை 7 மணியளவில் மாயவன் கோவிலுக்கு சென்று கொடுப்பேன். நான் சீட்டு பணத்தை கொடுக்கும் போது எதிரிகள் நோட்டில் வரவு வைத்து கொள்வார்கள். பின்னர் சீட்டு பணம் பிரிப்பதை நிப்பாட்டி விட்டார்கள்.

எதற்காக நிப்பாட்டினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் கட்டிய சீட்டு பணம் தற்போது வரை தரவில்லை. நான் நம்பிக்கையோடு சீட்டு பணத்தை கேட்கும் போதெல்லாம் தருவார்கள் என்பதால் எதிரிகளிடம் சீட்டு போட்டிருந்தேன். வரவு வைத்த நோட்டுகள் எ்ல்லாம் என்ன ஆனது என்ற விவரம் தெரியாது. எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க யார் புகார் கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தனார்.

<u>1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கோவிலின் வரிதாரரா என்றால் இல்லை. 7 குழுக்களாக சீட்டு பணம் நடத்தினார்கள் என்ற விவரம் எனக்கு யார் சொன்னார் என்றால் நான் சீட்டு பணம் கட்ட செல்வேன். ரூ.61000 சீட்டில் வாரம் ரூ.500 செலுத்தினேன். இது தவிர மற்ற 6 குழுக்களில் எத்தனை சீட்டுகள் உள்ளது என்றால் ரூ.30000 அல்லது ரூ.31000, ரூ.32000, ரூ.50000 மற்றவை எனக்கு தெரியாது. 7 குழு உள்ள விவரம் யார் சொன்னார் என்றால் தெரியாது. நான் கழிவு போக கட்டுவேனா அல்லது கழிவு இல்லாமல் கட்டுவேனா என்றால் சீட்டு பணத்தை எடுத்தால் கழிவு கிடையாது. எடுக்காவிட்டால் கழிவு உண்டு. கழிவு போக தான் மீதி பணத்தை நான் கொடுப்பேன் என்றால சரிதான். இந்த சீட்டில் இது வரை சீட்டு பணம் எடுக்கவில்லை. இது வரை 20 சீட்டு கட்டி உள்ளேன். 4 வது சீட்டில் எவ்வுளவு பணம் செலுத்தினேன் என்றால் ஞாபகம் இல்லை. நான் செலுத்தியதாக சொல்லபடும் ஒவ்வொரு வார சீட்டிலும் குறிப்பிட்டு எவ்வுளவு கழிவு எவ்வுளவு செலுத்தினேன் என்று சொல்லமுடியாது என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரிக்கும் போது நான் செலுத்திய சீட்டு பணத்தில் ஒவ்வொரு வாரமும் வாரம் எவ்வுளவு செலுத்தினேன் என்று எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். என்னுடன் சேர்ந்த மற்ற சீட்டு போட்டவர்களம் அதே போல் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். புகாரை நான் படித்து பார்க்கவில்லை. புகார் எந்த மாதம் கொடுக்கபட்டது என்று தெரியாது. நான் காவல்நிலையம் சென்றேனா என்றால் சென்றேன்.

நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். காவல்நிலையத்திற்கு சாயங்காலம் சென்றேன். நான் காவல்நிலையம் சென்ற நாளில் புகார் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். என்னிடம் புகார் வாங்கினார்களா என்றால் ஞாபகம் இல்லை. என்னை இரண்டு, மூன்று முறை காவல்நிலையத்திற்கு கூப்பிட்டார்கள், நான் கருவுற்றிருந்ததால் ஒரு முறை மட்டும் சென்றேன். கோவிலில் நிர்வாகம் சம்பந்தமாக மகேஷ் மாயவனுக்கும், எதிரிகளுக்கும் பிரச்சினை உள்ளது என்றால் தெரியாது. என்னை காவல்நிலையத்திற்கு யார் அழைத்து சென்றார்கள் என்றால் என் அத்தை அருமைகிளி கூப்பிட்டார்கள். வாத்தியார் எந்த பள்ளியில் வேலை பார்க்கிறார் என்றால் தெரியாது. வாத்தியாரின் அப்பா பெயர் தெரியாது. வாத்தியார் பெயரும் தெரியாது. நான் சொல்வது போல் எவ்வித சீட்டு பணமும் எதிரி பிரித்திருப்பது கிடையாது என்றாலும் நான் அவரிடம் சீட்டு பணம் செலுத்தி இருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. என்னிடம் போலிசார் விசாரித்து வாக்குமூலம் எங்கு வைத்து வாங்கினார்கள் என்றால்

ஞாபகம் இல்லை. ஆனால் காவல்நிலையத்தில் வைத்து எழுதி கொடுத்தேன். நான் எழுதி கொடுத்த விவரம் நானே தான் எழுதினேன். எதிரி சீட்டு பணம் மாயவன் கோவிலில் வைத்து பிரித்தார்கள் என்றும் சீட்டு பணத்தை தரவில்லை என்றும் எழுதி கொடுத்தேனா என்றால் புகாரில் கையெழுத்து போட்டு கொடுத்தேன். புகார் யார் பெயரில் எழுதி கொடுத்தேன் என்றால் மாயவநாதன் பெயர் எழுதினேன். சார் பெயர் தெரியவில்லை, நான் அவரிடம் சீட்டு போடவில்லை. புகார் கொடுத்த அன்று நிறைய நபர்கள் வந்தார்கள். அவர்களும் தனித்தனியாக புகார் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னது போல் எவ்வித சம்பவமும் நடைபெற்றிருப்பது கிடையாது என்றால் சரியல்ல. மாயவன் கோவிலில் வைத்து நான் எதிரிகளிடம் பணம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கொடுத்த புகாரில் மாயவநாதனின் தகப்பனார் பெயர் எழுதவில்லை என்றால் ஞாபகம் இல்லை. சீட்டு பணம் எடுத்தவர்கள் பணத்தை செலுத்தி விட்டார்களா என்றால தெரியாது. ரூ.61000 சீட்டு பணத்தில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்று தெரியாது. நான் என்றைக்காவது ஏலத்தில் கலந்து கொண்டேனா என்றால் இல்லை. கோவிலில் வைத்து நடத்தப்படும் சீட்டு பணம் கோவிலால் நடத்தப்பட்டு இரண்டாவது சீட்டு கோவிலுக்கு என்றால் தெரியாது. ஆனால் அங்கு இருப்பவர்களுக்கு என்று சொல்வார்கள். நான் சொல்வது போல் இந்த எதிரி மீது எவ்வித புகாரும் நான் கொடுத்திருப்பது கிடையாது என்றாலும் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. மகேஷ் மாயவன் என்பவரை எனக்கு தெரியும். அவர் கோவிலின் வரிதாரர் என்றால் சரிதான். கோவிலில் நிர்வாகம் செய்வது தான் இருவருக்கும் பிரச்சினை என்றால் தெரியாது. மகேஷ் மாயவன் தூண்டுதலின் பேரில் எதிரி மீது கொடுக்கப்பட்டபொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi